30.4.2023

ஊடக வெளியீடு

Ir. பத்மநாதன் K.

தலைமை நிர்வாக அதிகாரி

PBA ஹொல்டிங் பெர்ஹாட் மற்றும் PBAPP.

**பினாங்கு மேக விதைப்பு திட்டம் 2023: முதல் அலை நடவடிக்கைகள் மே மாத தொடக்கத்திற்கு தேதி மாற்றியமைக்கப்பட்டது**

- **வானிலை நிலவரங்களின் அடிப்படையில் அதிக மழை பொழிவுக்கான சாத்தியக்கூறுகளை அதிகரிக்கும் வகையில் அதன் நடவடிக்கைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.**
- **இலக்கு: ஆயர் ஈத்தாம் மற்றும் தெலுக் பஹாங் அணைக்கான நீர்ப்பிடிப்புப் பகுதிகள்.**

பினாங்கு, ஞாயிறு, 30.4.2023: METMalaysia பரிந்துரையின் அடிப்படையில், பினாங்கில் மலேசிய அரசு ஆகாயப் படை (RMAF) மேக விதைப்பு நடவடிக்கைகளின் முதல் அலையை மே மாத தொடக்கத்தில் தொடங்குவதற்கு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

வானிலை நிலவரம் உகந்ததாக இருக்கும் போது அதாவது பெரிய மழை மேகங்கள் சரியான உயரத்தில் இருக்கும் என்று கணிக்கப்படும் வேளையில் மட்டுமே மேக விதைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அதிக மழை பொழிவின் சாத்தியத்தை அதிகரிக்க முடியும். இதுவே இந்த நடவடிக்கையின் முதன்மையான காரணமாக அமைகிறது.

PBAPP இந்த முடிவை 28.4.2023 தேதியிட்ட கடிதத்தில் பினாங்கு நீர் விநியோக ஆணையம் (நீர் கட்டுப்பாட்டு வாரியம் - BKSA) மூலம் அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளது.

நாங்கள் இந்த முடிவை (அணுகுமுறை) முழுமையாக ஆதரிக்கிறோம். தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனம் (NADMA), RMAF, METMalaysia மற்றும் BKSA ஆகியவற்றின் முழுமையான ஆதரவை PBAPP பாராட்டுகிறது. இந்நிறுவனங்கள் பினாங்கிற்கான மேக விதைப்பு நடவடிக்கைகளை விரைவுப்படுத்துகிறது.

PBA
Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

பினாங்கில் உள்ள இரண்டு அணைகளின் கொள்ளளவை பின்வரும் அட்டவனை காண்பிக்கிறது:

| அணை கொள்ளளவு | | |
|---|---|---|
| | 1.1.2023 | **29.4.2023** |
| ஆயர் ஈத்தாம் அணை | 82.5% | **43.6%** |
| தெலுக் பஹாங் அணை | 64.0% | **49.1%** |

இந்த இரண்டு அணைகளின் கொள்ளளவும் சம்பந்தப்பட்ட நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் குறைந்துவிட்டது.

1.1.2023 முதல் பினாங்கில் நீடித்த வறட்சி (பருவநிலை மாற்றத்துடன் தொடர்புடையது) மற்றும் அதிகமான நீர் தேவை ஆகியவை இந்த நிலைக்கான முக்கிய காரணங்களாகும். பினாங்கில் ஏற்படக்கூடிய நீர் விநியோக நெருக்கடியைத் தவிர்க்க அடுத்த மழைக்காலத்திற்கு முன்னதாகவே அணைகளில் முடிந்த அளவிற்கு நீர் நிரப்பப்பட வேண்டும்.

வருகின்ற 2023, மே மாதத்தில் மேற்கொள்ளப்படும் மேக விதைப்பு நடவடிக்கைகளை RMAF விமானம் சிலாங்கூரில் உள்ள சுபாங் RMAF விமான நிலையத்தில் இருந்து புறப்படும். பினாங்கில் நடைபெறும் இந்த நடவடிக்கையை கண்காணிக்க PBAPP-இன் பொறியியலாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

PBAPP மேக விதைப்பு நடவடிக்கையின் முடிவுகளை இலக்கு வைக்கப்பட்ட நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பொழியும் மழைப் பதிவு மற்றும் ஆயிர் ஈத்தாம் மற்றும் தெலுக் பஹாங் அணைகளின் கொள்ளளவு மூலம் கண்காணிக்கப்படும். இதன் முடிவுகளின் அடிப்படையில், பினாங்கு மாநில அரசாங்கமும் PBAPP வாரியமும் 2023-இல் கூடுதலான மேக விதைப்பு நடவடிக்கைகளைக் கோரலாம்.

நன்றி.

---

எழுத்தாக்கம் :Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
கார்ப்பரேட் தகவல் பிரிவு
மின்னஞ்சல் :syarifah@pba.com.my